1972 மார்ச் 28]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்களுக்கு தனித் தனியாகத் திட்டங்கள் இருக்கலாம். பட்டதாரிகள், தொழில் நுட்பத் தகுதியுள்ள பட்டதாரிகளுக்குத்தான் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த இளைஞர் அணியில் இருப்பவர்களுக்கு என்ன என்ன அடிப்படையில் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று விதிமுறைகள் இருக்கிறதா? இருந்தால் எவ்வளவு என்று கூற முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்கள் படித் திருப்பதால் சம்பளம் என்று நாம் எதையும் நிர்ணயிக்கவில்லை. மாதம் ஒன்றுக்கு அவர்கள் ஆற்றுகின்ற பணிச் செலவுகளுக்கு என 175 ரூபாய் மதிப்பு ஊதியம் தரப்படுகிறது.

Post of Deputy Inspector-General of Police

* 741 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to appoint a Deputy Inspector-General of Police (Services); and

(b) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ), (இ) காவல்துறை ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1—9—71 முதற் கொண்டு காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அலுவலகத்தில் ரூ. 1,600–100–2,000 சம்பள விகிதத்தில், காவல்துறை துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (பணிகள்) முன்னரே நியமிக்கப் பட்டுள்ளார். அவரிடம் கீழ்க்கண்ட பணிகள் ஒப்படைக்கப் பட்டுள்ளன :

(a) சீரமைப்புச் செயற்குறிப்புகள், ஆட்படை ஊற்றத் திட்டம்.

(b) தற்போதுள்ள பணி விதிகளில் மாற்றம், புதுப்பணி விதிகள் வகுத்தல்.

(c) புதிய தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்துதல்.

(d) காவல்துறை கணிப்புப் பொறிப் (Computer) பிரிவு.

(e) ஊர்க்காவல் படையும், சிவில் பாதுகாப்பும்.

(f) காவல்துறை ஆராய்ச்சி நிலையம்.

காவல்துறை துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (பணிகள்) பதவிப் பெயர் தற்பொழுது காவல்துறை துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (திட்டமிடுதல், ஒருங்கிணைப்பு) என மாற்றி அமைக்கப் பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இப்பொழுது சமீபத்திலே தான் மதுரை கார்ப்பரேஷன் ஆயிற்று. இந்த டி.ஐ.ஜி. அதற்குப் பொறுப்பாக இருப்பார்களா? அல்லது தனியாக கமிஷனர் போடப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைப்பற்றிய சில யோசனைகள் அரசுக்கு வந்திருக்கின்றன. அவைகளைப்பற்றி அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இப்பொழுதிருக்கின்ற டி.ஐ.ஜி.-க்கள் எத்தனை பேர்கள்? மேலும் அவர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : டி.ஐ.ஜி.-க்கள் 11 பேர்களும், அடிஷனல் ஐ.ஜி. ஒருவரும் ஆக இருக்கிறார்கள்.

Regional Public Relations Officers

* 742 *Q.*—THIRU J. JAMES : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that Regional Public Relations Officers were appointed;

(*b*) what is the (i) minimum qualification prescribed, (ii) pay fixed and (iii) their service condition;

(*c*) whether they were appointed through Public Service Commission; and

(*d*) if not, the reasons therefor?